



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) திருப்பூர் மாவட்டம்

## வள்ளிபுரம் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண் - 345/6A1 –ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் அமைப்பு வரைபடம். ( திட்டமில்லா பகுதி )

இணையதள விண்ணப்ப எண்; : 1KHJMCRV /2023 நாள் : 23.12.2023

அளவு : 1:500 (1cm = 5cm)

N

**குறிப்பு :**

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : 0.37 ¾ ஏக்கர் (அ) 1528.00 சதுர மீட்டர் |
| கோரிய மனைகள் | : 14 |
| ஒதுக்கிய மனைகள் | : 12 |
| மனைப்பிரிவின் எல்லை | ........................ |
| நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை | ........................ |

**பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :**

I) மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு : 91.93 சதுர மீட்டர்

II) பூங்கா :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (1528.00 - 91.93 = 1436.25) x 10/100 = 143.62 சதுரமீட்டர்

ii) ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு : 146.64 ச.மீ (10.21%)

III. **பொது உபயோகம்:**

A) LOCALBODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவு பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x(0.5/100)
(1528.00 - 91.75) x 0.5/100 = 07.18 சதுர மீட்டர்

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 13.93 சதுர மீட்டர் (0.97 %)

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:**

B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவு பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x(0.5/100)
(1528.00 - 91.75) x 0.5/100 = 07.18 சதுர மீட்டர்

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 13.93 சதுர மீட்டர் (0.97 %)

**கட்டிட வரம்பு:**

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்

9.0மீக்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

**மூலை முடக்கு:**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ x 1.5 மீ விடப்படல் வேண்டும்.

12.0மீக்கு மேல் 30.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5 மீ x 4.5 மீ விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள் :**

1. அரசாணை எண்–18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்–04.02.2019, (ம) அரசாணை எண்–16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்–31.01.2020–ன் படி மனைப்பிரிவு சாலைகள் (மூலை முடக்குகள் உட்பட) பூங்கா மற்றும் LOCALBODY –ற்கு பொது உபயோகம் ஆகியன உள்ளாட்சிக்கும் மற்றும் TANGEDCO –ற்கு பொது உபயோகம் TANGEDCO/உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் –181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020, மற்றும் அரசாணை எண் –141, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022 ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், வள்ளிபுரம் ஊராட்சி தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லதக்கதல்ல.
9. இம்மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின்னழுத்த கம்பிப்பாதையினை மனுதாரர் தனது சொந்த செலவில் சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**SWP / DTCP / TIRUPPUR / LAYOUT APPROVAL NO. : 11 / 2024**

சா. ரிஸ்வான்
அளவர் / உதவி வரைவாளர்

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2024.01.11 16:02:14

இரா.க. இளஞ்செழியன்
வரைவாளர் நிலை - III

ரா.செபஸ்தி ரோசாலி
மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.